## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(24.05.2023 முதல் 28.05.2023)

அறிக்கைஎண்: 40/2023 தேதி: 23.05.2023

### நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37 - 38 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 °செ ஆகவும் பதிவானது.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (24.05.2023 முதல் 28.05.2023).

| கடந்தவாரவானிலை (19.05.2023 முதல் 22.05.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (24.05.2023 முதல் 28.05.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 19/05 | நாள்-2 20/05 | நாள்-3 21/05 | நாள்-4 22/05 | தேதி | நாள்-1 24/05 | நாள்-2 25/05 | நாள்-3 26/05 | நாள்-4 27/05 | நாள்-5 28/05 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 4 | 0 | 3 |
| 38 | 37 | 38 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 36 | 36 | 36 |
| 28 | 28 | 28 | 28 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 28 | 27 | 27 | 27 |
| 3 | 1 | 3 | 3 | மேகமூட்டம் (ஆக்டா) | 2 | 2 | 4 | 4 | 5 |
| 78-70 | 75-71 | 74-72 | 76-70 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-50 | 70-40 | 70-30 | 70-30 | 70-30 |
| 11 | 8 | 13 | 8 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 12 | 12 | 10 | 12 |
| தெற்கு | தெற்கு | தென் தென் கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

### நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெருபாலும் தெளிவாக காணப்படும். 26.05.2023 மற்றும் 28.05.2023 ஆகிய தினங்களில் குறைந்த அளவு தூரல் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 – 37 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 - 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 - 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 - 12 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு, பயிர்களுக்கு அதிக அளவு தண்ணீர் பாய்ச்சவும். |
| நெல் | நாற்றாங்கால் | குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 மற்றும் ஆடுதுறை 47 விதைகளை தேர்ந்தெடுக்கவும் |
| நெல் | நாற்றாங்கால் | கார்பென்டாசிம் மருந்து 1 கிலோ விதைக்கு 2 கிராம் அல்லது சூடோமோனாஸ் பாக்டீரியா 10 கிராம் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகள் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்த முடியும். |
| நெல் | நாற்றாங்கால் | தற்ப்போது நிலவும் வானிலையின் காரணமாக நெல் நாற்றாங்காலில் இலைபேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷம் 25 % WG 100 கிராம் /எக்டர் அல்லது டைமித்யோட் 1.5 மி.லி/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| தென்னை | அணைத்து நிலைகள் | ருக்கோஸ் ஸ்பைரலிங் வெள்ளைப்பூச்சி காணப்படுகிறது. ஏண்கார்சியா ஒட்டுண்ணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தண்ணீர், மைதா கரைசலை தெளிப்பாக இடுதல் மற்றும் மஞ்சள் குச்சி பொறி வைக்கவும் |
| கால்நடைகளுக்கு | மாடு | வெப்பநிலை அதிகரிப்பதால் கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்ப தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம். |
| | | காற்றின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்கும் போது கறைவை மாடுகளின் தண்ணீர் குடிக்கும் அளவு அதிகமாவதோடு உலர் பொருள் உட்கொள்ளும் அளவு குறையும். இதனால் பால் உற்பத்தி குறைய தொடங்கும். ஏனவே பசுந்தீவனத்துடன் புரதசத்துள்ள பசுந்தீவனங்களை கொடுக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு, பயிர்களுக்கு அதிக அளவு தண்ணீர் பாய்ச்சவும்.

**இயக்குநர்**